உ
சிவமயம்



மாப்பாண மரபுதித்த சைவவேளாண்குல வழிவந்த
திருக்கோணமலை உப்புவெளியைப் பிறப்பிடமாகவும்
சாம்பல்தீவினை வதிப்பிடமாகவும் கொண்ட

**அமரர். திருமதி. சந்திரலேகா செல்லத்துரை**

அவர்கள் இறையடி சேர்ந்தமை குறித்த

# நினைவு மலர்

**20-11-2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்.

# திருமதி சந்திரலேகா செல்லத்துரை

## அவர்கள்



தோற்றம் 01-05-1946

மறைவு 21-10-2006

## திதி வெண்பா

ஆண்டு வியவதனில் ஐப்பசி நான்காம் நாள்
சனி காலை ஆறுமணி அபரபட்ச சதுர்தசியதனில்–நீண்டபுகழ்
சற்குணவதியாம் வையகம் போற்றும் சந்திரலேகா
வெள்ளிமலை அண்ணலடி சேர்ந்த நன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எல்லாவுலகமும் மானாய் நீயே
யேகம்ப மேவியிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

## திருவாசகம்

கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம் நீ
தேறும் வகைநீ திகைப்பு நீ
தீமை நன்மை முழுதும் நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து;
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

இறைவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்.

# திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை - உப்புவெளியைப் பிறப்பிடமாகவும் சாம்பல்தீவைப் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். செல்லத்துரை சந்திரலேகா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்துமா கடலின் நித்திலத்தீவான ஈழமா மண்ணின் குரைகடல் ஓத நித்திலங் கொழிக்கும் கோணமாமலை என்னும் பாடல் பெற்ற ஸ்தலத்தின் வடதிசை தன்னில், வானுயர் தென்னை, பனை தேமா முதலிய பயிர்களுடன், சிறந்த வளம் பெற்று விளங்கும் உப்புவெளி என்னும் கிராமத்தில், சீரும் சிறப்புடனும் வாழ்ந்த சந்திரசேகரம் பிள்ளை பகவதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாக, 01-05-1946 ஆம் ஆண்டு ஒளிச்சுடராய் சந்திரலேகா அழகுடன் தோற்றம் பெற்றார். திரு. ச. இராதாகிருஷ்ணன், திரு. இராதா மனோகரன், திருமதி. சசிலேகா துரைராசா, திரு. ச. இராதாசங்கர் ஆகிய நால்வரையும் சகோதரர்களாகப் பெற்றார். பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தையாகி, துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்தில் ஐந்தாம் வயதில் தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை இனிதே தொடங்கினார். அதன் பின்னர் வயது பதினொன்றில் யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆறாந்தரத்தில் படிப்பினைத் தொடர்ந்து சிரேஷ்ட பாடசாலைத்தராதரப் பத்திர வகுப்புவரை படித்தார் சின்னஞ்சிறு வயதிலிருந்தே கல்லூரியின் விடுதியில் தங்கி கற்றார். விடுதியிலிருந்து கல்வி கற்றதை தனது வாழ்நாளில் தனக்கு கிடைத்த ஒரு பேறாக என்றும் ஞாபகப்படுத்திக் கொள்வார். வாழ்க்கையில் மக்கள் சமுதாயத்தில் தன் நம்பிக்கையுடனும் சந்தோஷத்துடனும் வாழ்வதற்கு யாழ்/உடுவில் கல்லூரி விடுதி வாழ்க்கையே காரணம் எனக் கூறுவார். தனது பதினாறாவது வயதில் 04-06-1962 இல் திருகோணமலை சாம்பல்தீவு எழில்மிகு கிராமத்தில் சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை அவர்களின் நான்காம் புத்திரரான செல்லத்துரை ஆசிரியர் அவர்களை திருமணம் செய்தார். இல்லறம் என்னும் நல்லறத்திலே மலரும் மணமும் போலவும், மணியும் ஒலியும் போலவும், இணைபிரியா வாழ்வின் பேற்றையும் கண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு"

என்ற வள்ளுவன் வாக்குக்கேற்ப நல்லணிகளன்களாக பட்டதாரி - பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரியர் சத்தியசீலன் தி/ஸாகிறா கல்லூரி, கணிதப் பயிற்றப்பட்ட ஆசிரியர் உதயசீலன் தி/ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயம், ஜெயசீலன் - எரிபொருள் நிலையம், திருமலை, திருமதி. இராசலிங்கம் தர்சினி என நான்கு மக்களையும், இராசலிங்கம் - கிராம சேவை அதிகாரி கும்புறுப்பிட்டி கிழக்கு, பிரியதக்ஷனி, சுமதி, மதிவதனி, - ஆசிரியை மருமக்களாகவும் மக்கட் பேறாகப்பெற்றார். லினுசா, தனுஷிக்கா, கிரிசோத்மன், தனுஷிகன், சிவசாயினி, மிதுசணா, ததுசன், பதுமிதா, சுலக்சன், ஆகியோரை பேரப்பிள்ளைகளாகப் பெற்று சுடர் வீசி நின்றார். இவ்வாண்டு (2006) ஐப்பசி மாதம் தீபாவளி தினத்தில் அதிகாலை 5.30 மணிக்கு நித்திரையிலேயே அமைதியாக மீளாத்துயிலை அடைந்தார்.

பிறந்தவர் யாவரும் இறப்பது உண்மை. அறுபது வயதினில் இறைபதம் அடைந்த எங்கள் தெய்வமே, உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு மனைவி சந்திராவிற்கு
# அன்புக் கணவரின் துயர மடல்.....

தாங்கள் 21-10-2006 சனிக்கிழமை காலை 6.00 மணி அளவில் நித்திரையிலேயே இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். 20-10-06 வெள்ளிக்கிழமை இரவுணவை சந்தோஷமாகச் சாப்பிடுகிறீர்கள்; வெள்ளி இரவு இரண்டு மணிக்கு மகள் தர்சினியிடம் நெஸ்ரமோல்ட் பானம் வாங்கிக் குடிக்கிறீர்கள்; வழமை போல் காலைக்கடன் முடிக்க நான் உங்களை அழைத்துச் சென்று, திரும்ப படுக்கைக்குக் கொண்டு வந்து விடுகிறேன்; காலை ஐந்தரை மணிக்கு மகள் தர்சினியுடன் கதைக்கிறீர்கள்; வழமையாக ஆறு மணிக்கு பல் துலக்கிக்கொண்டு உங்கள் அறையிலிருந்து சமையலறைக்கு வரும் நீங்கள், அன்று வராமலே உறங்கிவிட்டீர்கள். அன்று தீபாவளித் திருநாள்; மகள் தர்சினியின் பிள்ளைகள் நால்வருக்கும் வழமையாக ஆளுக்கு நூறு ரூபா என தீபாவளி அன்பளிப்பு வழங்குவீர்கள்; அப்பணத்தை உங்களிடம் கொடுப்பதற்கு, உங்கள் விழிப்பை எதிர்பார்த்து காத்து நின்றேன்; இத்தனை காலமும் வழமையாக பத்திரகாளியம்மன் ஆலயத்திலிருந்து நான் தான் தங்களுக்கு கௌரிகாப்பை எடுத்து வந்து தருவேன். இம்முறை எனது மூத்த சகோதரன் ஒரு கிழமைக்கு முன் காலமாகியதால், என்னால் ஆலயம் செல்ல முடியாது போயிற்று. எனவே மருமகன் இராசுவே சென்று எடுத்து வரட்டும் என்று ஆலோசனையும் கூறினீர்கள். இறுதியில் கௌரிகாப்பு எடுக்க காளியோயிலுக்கு இராசுவும் போகவில்லை; நானும் போகவில்லை காலை 6.00 மணிக்கு தாங்கள் இறைவனடி சேர்ந்து விட்டீர்களளே!

பாசமிகு சந்திரா,

குடும்பப் பாரத்தை என்னிடம் தந்து விட்டு நீங்கள் ஒடி விட்டீர்களா? இல்லவே இல்லை; எங்களுக்கு குடும்பபாரம் என்ன இருக்கிறது? நாங்கள் இருவரும் எங்கள் வாழ்நாளிலேயே, நாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகள் நால்வரையும் சமுதாயத்தில் சான்றோர்களாக்கி, அவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணைகளையும் தேடிக்கொடுத்து விட்டோமே; எங்களுக்கு என்ன பொறுப்பு? என்ன கவலை? ஒன்றுமில்லையே. பிள்ளைகள் நால்வரும் புத்தியாக வாழ்ந்து சமுதாயத்தில் முன்னேற வேண்டியதுதானே? நாங்களும் குடும்ப வாழ்வு நாற்பத்தைந்து வருடகாலம் வாழ்ந்தோமே;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் ஏற்பட்ட இன்ப துன்பங்களுக்கெல்லாம் நின்று பிடித்தோமே; நாங்கள் இருவரும் இல்லறம் நல்லறம் என சந்தோஷமாகத்தானே வாழ்ந்தோம். தங்கள் முகத்தில் இலட்சுமிகரம் இருப்பதாக பெரியோர்கள் பலர் என்னிடம் கூறி இருக்கிறார்கள். அப்போது நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பேன். என்னைப்பெற்றெடுத்த எனது தாயாரும், உங்களின் பெரியம்மாவும் சேர்ந்துதானே எங்களுக்கு 04-06-1962 இல் விவாகம் செய்து வைத்தார்கள். எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்கு அழகான பெண் வரவேண்டும் என்று எண்ணுவது உலக வழக்கம்தானே? எனது அம்மாவும் உங்கள் முக வசீகரத்தைக் கண்டு உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். எனது அம்மாவும் தனது உயிர் உள்ளவரை தங்களிடம் மிகவும் பாசமாகவே இருந்தார். நாங்கள் இருவரும் சிலசமயம் கோபதாபப்படலாம். அது புதினமல்ல அச்சமயம் எனது அம்மா சொல்லுவார்; சற்றே சூடு; சற்றே குளிர் எனப்பகிடி பண்ணுவது உங்களுக்குத் தெரியுந்தானே?

அன்பு நிறைந்த சந்திரா!

நாங்கள் விவாகஞ்செய்து மிகவும் குறுகிய காலத்தில் எங்கள் பிள்ளைகள் நால்வரையும் பெற்றெடுத்தோம். 1968ம் ஆண்டு வரை தங்கள் அப்பா அம்மா வீட்டில்தானே இருந்தோம். பின்னர் சாம்பல்தீவுக்கு வந்து, உங்கள் பெற்றோர் தந்த நிலத்தில் ஓலை வீடு கட்டி வாழ்ந்தோம். எங்களிடம் அப்போது போதிய பணம் இருக்கவில்லை. குடிசை வாழ்க்கையில் இனிமையாக வாழ்ந்தோம். வீட்டுக்கு வரும் அன்பர்களும், பாடசாலை அதிபர் ஒருவரும் குடிசை வாழ்க்கை வாழக்கூடாது; வீடு கட்ட வேண்டுமென்று கூறுவார்கள். 1980ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் என்னைப் படிப்பித்த ஆசிரியர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அவரை வரவேற்று உபசரித்தோம். வீடு கட்ட வேண்டுமென்றார். பணம் இல்லை என்றோம். "கட்டலாம் கட்டு" என்று கூறினார். வீட்டிற்குரிய வரைபடமும் உடனும் வரைந்து தந்தார். வீடு கட்டுவதற்கு வங்கியில் கடன் உதவி எடுக்கலாம் என்று பத்திரிகையில் படித்தேன் என்று நீங்கள் கூறி உங்கள் பெறுமதிமிக்க பதக்கம் சங்கிலியை விற்றுவரும்படி தந்தீர்களே! எங்களுக்கென்றொரு வீடு கட்ட வேண்டுமென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக உணர்ந்திருந்தீர்களே! வீடு கட்டுவதற்கு எனது குருவின் ஆசீர்வாதமும், அடுத்து தங்களின் ஆர்வமும் ஊக்கமும் துணை நின்றது. வங்கியில் கடன் உதவியும் கிடைத்தது. ஒரு வருட காலத்தில் நாம் இருக்கும் வீடு கட்டிமுடித்தோம். 1982இல் புதுமனை குடி புகுந்தோம். மாதா, பிதா குரு, தெய்வம் என்பது சான்றோர் வாக்கு.

1985ஆம் ஆண்டில் எங்கள் கிராமத்தில் வயது வந்த பிள்ளைகளை, ஆண்களை இராணுவம் சுற்றிவளைத்து பிடித்துக்கொண்டு, காலி பூசா சிறைச்சாலைக்கு கொண்டு சென்றது. எங்கள் பிள்ளைகள் சத்தியன், உதயன், ஜெயந்தன் மூவரையும் பிடித்து பூசா சிறைச்சாலைக்கு கப்பலில் கொண்டு சென்ற சமயம், நீங்கள் பட்ட துயரம் நான் அறியாதது அல்ல இரண்டு மூன்று மாதம் பூசா முகாமிலிருந்து பிள்ளைகள் மூவரும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

வாழ்க்கையும் சுமாராகப்போய்க்கொண்டிருந்தது. கையில் பணத்தை சேமித்து வைக்கவில்லை. வருகின்ற பணத்தை பிள்ளைகளுக்காக பிரயோசனமான முறையில் செலவு செய்து விடுவேன். எங்களுக்கும் வயது வந்துவிட்டது; கையில் காசு இருக்க வேண்டும் என்று புத்திமதி கூறினீர்கள். எனக்கு ஒன்று நேர்ந்தால் உங்களை நடுத்தெருவில் விட்டுச்செல்ல மாட்டேன். எனது பென்சன் இருக்கிறது என்பேன். 'பென்சனை அனுபவிக்கமாட்டேன். உங்களுக்கு முதல் நான் காலமாக வேண்டும்' என்பீர்கள்.

சந்திரா! என்ரை இராசாத்தி!!! தங்கள் வாக்கு அப்படியே நடந்து விட்டது. எனக்கு முதல் நான் இருக்கும் போது நீங்கள் இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். எங்கள் வாழ்நாள் முழுதும், முக்கியமாக கடைசி நாட்களில்கூட தங்கள் மனம் நோகவிடாதபடி, அனைத்து நான் நடந்துள்ளமையை எண்ணி நான் ஆறுதலடைகிறேன். கடைசி நேரத்தில் என்னிடம் ஒப்படைக்க வேண்டியவைகளை என்னிடம் ஒப்படைத்தீர்கள். நீங்கள் ஒப்படைத்த பொருட்களை மக்கள் அறிய வேண்டும்; நீங்கள் சேமித்த பணம் ஐம்பதாயிரம் ரூபாவும் வேறு ஒரு வழியில் நாற்பதாயிரம் ரூபாவுமாக மொத்தம் தொண்ணூறாயிரம் ரூபா ஆகும். உங்கள் வாழ்க்கைத் திறனுக்கு இவைகளைவிட வேறு என்ன சான்று இருக்கிறது! சந்திரா!

**கணவன் சி. செல்லத்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் மக்கள் மருமக்கள் தாய்
# சகோதரர்கள் பேரக்குழந்தைகள் உறவினர்
# அஞ்சலி

ஆருநிகரில்லா அருங்குணத்தின் பெண்ணாக
பேருருவாய் எப்போதும் பெருமையோடு வாழ்ந்திட்டீர்
மாசிலா அன்பின் வடிவமதாய் துலங்கி நின்றீர்
இன்றுனை இழந்ததனால் நிலைகுலைந்து நின்கின்றோம்
நிகரில்லா இளங்குருத்தை சிலநாள் முன் இழந்து
அப்பெரு வடு ஈரம் காயுமுன்னே - பெரிய தாயாய்
அவர் பின்னே சென்றீரோ - ஜீரணிக்க முடியவில்லை
விலைமதிப்பில்லா மாமணியே எங்கு சென்றீர்?
உம்மை நினைக்கையில் நெஞ்சம் கனக்கிறதே!
கண்ணீர் பெருக விழி சோர்ந்து நிற்கின்றோம்
கண்ணயர நீரும் கயிலைமலை நாதன்
விண்ணுலகம் அழைத்ததும் விரைந்துதான் சென்றீரோ
அங்கெங்கெனாதபடி எங்கும் நிறைந்து நிற்கும்
இறைவன் பதம் ஒன்றித்தீரே!
எப்போது உமைக்காண்போம் இனி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சகோதரிக்கு.....

இறை சிருஷ்டியில் மானிடப் பிறவி சிரேஷ்டமானது
ஜனனம் மரணம் இவற்றின் கால இடைவெளிதான்
உயிரோட்டம் தரும் நமது பூவுலக வாழ்க்கை
இந்த இயற்கை ஒழுங்கில் உட்பட்டவர்தான்
என் அன்புச் சகோதரி சந்திரலேகா.

என் அன்னையை தன் உடன் பிறந்த
சோதரியாய்க் கொண்டவர் அன்புக்குரிய எம் சிற்றன்னை
அவர் பெற்றெடுத்த செல்வ மகள் சந்திரலேகாவை
தன் முதற் பெண்மகளாய்க் கண்டவர் என்பார் என் அன்னை.
என் தாயார் நோயுற்ற ஒருசமயம் அவரைப் பார்க்கவந்த சோதரி
கண்கலங்கித் தவித்ததை ஒருகணம் நினைக்கின்றேன்.
ஆசையம்மா என்றால் பாசத்தால் நெகிழ்ந்து விடுவாய் சோதரி.
எங்கள் குடும்பத்துடன் அவர் குடும்பம் கொண்ட உறவை
அளவுகோலிட எனக்கு வார்த்தைகள் தெரியவில்லை.

என் சகோதரியின் இயல்பான குணங்களை
நான் ஆழமாகப் பார்க்கிறேன்;
பெயருக்கேற்ப வசீகரமான தோற்றம்;
அன்பான மலர்ந்த முகம்; அளவான பேச்சு;
இனிமையாகப் பேசுவார்; பொறுமை காப்பவர்;
தேவையற்ற விஷயங்களில் அக்கறையில்லாதவர்;
தன் கடமையில் நிறைவு காண்பவர்; ஆரவாரமில்லாதவர்;
உலகியலில் ஒட்டாத ஒரு ஈடுபாடு.
கர்ம யோகியின் லக்ஷணங்களும் இவைதான் என்பர்.

காலமெல்லாம் அன்பைப் பொழிந்த உத்தம கணவன்;
முத்தான நான்கு மக்கள்; நன்மக்களாய் உயர்நிலை அடைந்த

-பின்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதியராய் ஆசிகூறி முடித்து வைத்த மக்களின் திருமணங்கள்;
அவ்வழியே பேரக்குழந்தைகளின் மழலை அமுதம் பருகி
இல்லறக் கடமைகளைச் சரிவர முடித்தபோதும்,
இறைவன் பூரண நிறைவைத்தர மறுத்ததேனோ?

பிராரப்த வினை பின்தொடர இடையிலே ஏற்பட்ட
கடும் உபாதை துன்பம் தந்து துடித்த போதும்,
பொறுத்துச் சகித்து காலத்தை வென்றெடுத்தார் சோதரி.
தன்னிலை குலையாது இறுதிவரை போராடி,
கைப்பிடித்த கணவருக்கும், பெற்றெடுத்த மக்களுக்கும்,
கூடவே இருந்த அருமை மகள் மருமகனுக்கும்,
பெற்ற அன்னைக்கும், உடன் பிறப்புக்களுக்கும் துன்பம் தராது,
மரணத்தை எதிர்கொண்டு தன்னைத்தானே தயார்படுத்தி
ஓர் நொடிக்குள் அமைதி பெற்றார் சாந்தியுடன்.

மரணம் என்பது புதிய சக்தியும் ஆற்றலும்
உயிரில் உருவாகும் ஓர் புனித நிகழ்வாகும்.
ஜீவன் தன் இலட்சியத்தை அடையும் வரை
பழுதடைந்த சரீரத்தை மாற்றி - புதிய
சரீரத்தில் நுழையும் அற்புத நிகழ்வு ஜனனமாகும்.
பிறவிதோறும் சற்கருமங்கள் செய்து - இறுதியில்
இறைபதம் அடைதலே மனிதப் பிறவியின் நோக்கமாகும்.

சோதரியின் ஆத்மா பிறவாப்பெருநிலை அடைய
எல்லாம் வல்ல கோணேசர் தாள் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

அன்புச் சகோதரி
**சியாமளா தாமோதரம்பிள்ளை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகச் சிறப்பு வெண்பா



தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார்சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி வாழ்வில் சொல்ல வேண்டிய மந்திரங்கள்

கணபதி

1. சுக்லாம் பரதம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே.

2. கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்தஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்.

முருகன்

3. மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மகச்சித்த கேஹம்
மஹீதேவ தேவம் மஹாதேவ பாவம்
மஹாதேவ பாலம் பஜேலோக பாலம்

சிவன்

4. ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதா சிவலிங்கம்

5. நாகேந்தர ஹராய த்ரிலோசனாய
பஸ்மாங்கராகாய மஹேச்வராய
நித்யாய சுத்தாய திகம்பராய
தஸ்மை நகாராய நமச்சியாய.

மகா விஷ்ணு

6. வஸுதேவஸுதம் தேவம் கம்ஸ சாணூரமர்தனம்
தேவகீ பரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம் ஸுரேசம்**
**விச்வாகாரம் ககனஸத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம்**
**லக்ஷ்மீ காந்தம் கமலநயனம் யோகி ஹ்ருத்த்யான கம்யம்**
**வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வ லோகைக நாதம்**

தினமும் பெண்கள் கூறிவந்தால் அஷ்டலக்ஷ்மியின் அருள் கிட்டும்

1. **சர்வ மங்கள மாங்கல்யே சிவே**
**சர்வார்த்த சாதகே! சரண்யே**
**த்ரயம்பகே தேவி நாராயணீ நமோஸ்துதே**

காயத்ரி மந்திரம் இதைச் சொல்வதால் கொடிய வினைகள் அகலும் மனோபலம், உடற்பலம் கூடும்.

2. **ஓம்**
**பூர்புவஸ்ஸுவ: தத் ஸவிதுர்வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோந ப்ரசோதயாத்**

மகா மிருத்யுஜ்ஞய மந்திரம்
எவ்வாறு வெள்ளரிப்பழம் கொடியின் பந்தத்தினின்றும் விடுபடுகிறதோ, அவ்வாறே பரமேஸ்வரன் நம்மை மரணத்தினின்றும் விடுவித்து அழிவற்ற பதத்தை அருள்வான்.

3. **ஓம் த்ரயம்பகம் யஜாமஹே**
**ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்**
**உருவாருக மிவ பந்தனான்**
**ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.**

படிப்பதற்கு முன், வழிபடுவது. சரஸ்வதியே, வரங்களைத் தருபவளே, மனதைக் கவருகின்ற வடிவுள்ளவளே, நான் கற்கப் போகும் கல்வி, எப்பொழுதும் எனக்குப் பலிதமுடையதாகச் செய்வாயாக.

4. **ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணீம்**
**வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர் பவதுமே ஸதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் முன்

5. ஓம் ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்மஹவிர்
ப்ரஹமாக்னௌ ப்ரஹ்மணாஸ ுதம்
ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதினா

காலையில் விழித்து எழுந்தவுடன் கரதரிசனம்; கை விரல்களின் நுனியில் மஹாலஷ்மி வசிக்கிறாள்; உள்ளங் கையில் சரஸ்வதி வசிக்கிறாள்; உள்ளங்கை அடிப்பாகத்தில் மஹாவிஷ்ணு வசிக்கிறார். எனவே காலையில் என் கைகளில் இவர்களைத் தரிசிக்கிறேன்.

6. கராக்ரே வஸதே லட்சுமி கரமத்யே சரஸ்வதி
கரமுலேது கோவிந்த: பிரபாதே கர தர்ஸனம்

ஸ்ரீ மாருதி (ஆஞ்சநேயர்) கிருபை உண்டாக அனுதினமும் அறிவு, பலம், கீர்த்தி, தைரியம், அச்சமின்மை, ஆரோக்கியம் நாவன்மை உண்டாக.

1. புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வரோகதா
அஜாட்யம் வாக்படுத்வம்ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத்

கிருபை உண்டாக

2. ஸர்வ கல்யாண தாதாரம்
ஸர்வ வாபத்கந வாரகம்
அபார கருணா மூர்த்திம்
ஆஞ்ஜ நேயம் நமாம் யஹம்.

துஷ்டக் கிரஹங்கள் விலக

3. அஞ்ஜநா கர்ப்ப ஸம்பூதம்
குமாரம் ப்ரும்ஹ சாரிணம்
துஷ்டக்ரஹ விநாசாய
ஹனுமந்த முபாஸ்மஹே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த காரியங்களில் வெற்றிபெற

4. ஶ்ரீ ராமதூத மஹாதீர
ருத்ரவீர்ய ஸமுத்பவ
அஞ்ஜநா கர்ப்ப ஸம்பூத
வாயுபுத்ர நமோஸ்துதே!

காரிய ஸித்தி உண்டாக

5. அஸாத்ய ஸாதக ஸ்வாமிந்
அஸாத்யம் தவ கிம்வத!
ராமதூத க்ருபா ஸிந்தோ
மத்கார்யம் ஸாத்ய ப்ரபோ

பாபங்கள் தீர ராம மந்திரம்

6. ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நவக்கிரஹ ஸ்தோத்திரங்கள்

## ஸூர்ய ஸ்துதி

ஜபாகுஸூம ஸங்காசம் காச்யபேயம் மஹாத்யுதிம்/
தமோஸ்ரிம் ஸர்வ பாபக்நம் ப்ரணதோ (அ) ஸ்மி திவாதரம்//

## சந்த்ர ஸ்துதி

ததிசங்க துஷாராபம் க்ஷீரோ தார்ணவ ஸம்பவம்/
நமாமி சசிநம் ஸோமம் சம்போர் முகட பூஷணம்//

## அங்காரக ஸ்துதி

தரணீ கர்ப்ப ஸம்பூதம் வித்யுத்காந்தி ஸமப்ரபம்/
குமாரம் சக்தி ஹஸ்தம் தம் மங்களம் ப்ரணமாம்யஹம்//

## புத ஸ்துதி

ப்ரியங்கு கலிகா ச்யாமம் ரூபேணாப்ரதிமம் புதம்/
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம் தம்புதம் ப்ரணமாம்யஹம்//

## குரு ஸ்துதி

தேவானாம்ச ருஷீணாம்ச குரும் காஞ்சன ஸந்நிபம்/
புத்திபூதம் த்ரிலோகேசம் தம் நமாமி ப்ருஹஸ்பதிம்//

## சுக்ர ஸ்துதி

ஹிமகுந்த ம்ருணாளாபம் தைத்யாநாம் பரமம் குரும்/
ஸர்வ சாஸ்த்ர ப்ரவக்தாரம் பார்கவம் ப்ரணமாம்யஹம்//

## சனி ஸ்துதி

நீலாஞ்ஜந ஸமாபாஸம் ரவிபுத்ரம் யமாக்ரஜம்/
சாயா மார்த்தாண்ட ஸம்பூதம் தம்நமாமி சனைச்சரம்//

## ராகு ஸ்துதி

அர்த்தகாயம் மஹாவீர்யம் சந்த்ராதித்ய விமர்தனம்/
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம் தம்ராஹூம் ப்ரணமாம்யஹம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்டவற்றை பாராயணம் பண்ண முடியாதவர்கள் நவக்ரக ஸ்தோத்திரத்தை ஒரே ஸ்லோகத்திலும் துதிக்கலாம்.

ஆதித்யாயச சோமாய மங்களாய புதாயச
குரு ஸுக்ர சனிப்யஸ்ச ராகுவே கேதுவே நமஹ.
(9 தரம் உச்சரிக்கவும்)

சாந்தி மந்திரங்கள்

ஓம் பூர்ணமத; பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
பூர்ண மேவா வஸிஷ்யதே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் ஸஹனாவவது; ஸஹனௌ புனக்து
ஸஹ வீர்யம் கரவாவஹை
தேஜஸ்வினா வதீத மஸ்து
மா வித்விஷாவஹை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் அஸதோ மா ஸத்கமய
தமஸோ மாஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ அபிராமி அப்பாள் ஸ்துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்,
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்,
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்,

தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்,
துய்யநின் பாதத்தில் அன்பும் - உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் நீ அபிராமியே!!

ஸ்ரீ அபிராமி அந்தாதி

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன வெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராமி வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அம்குச பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

முருகன் ஸ்துதி

நாளென் செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமலிங்க அடிகளார் திருவருட்பா.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும், பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

## மஹா விஷ்ணு ஸ்துதி

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம்
கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திரலாகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே.

## ஆஞ்சநேயர் ஸ்துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை அளித்துக்
காப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகான்கள் அருளிய அமுத மொழிகள்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

இல்லறத்தில் இருந்து கொண்டே ஒருவன் தனக்குரிய எல்லாக் கடமைகளையும் சரிவரச் செய்துவரவேண்டும் தாய், தந்தை, மனைவி, குழந்தை இவர்களோடு இல்லறத்தான் வாழ்ந்தே ஆகவேண்டும் ஆனால் அவர்கள் யாரும் எனக்கு நெருங்கயி உறவினர்கள் அல்ல என்பதை தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

என்றைக்கு ஆன்மீகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயுதம் தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்த சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்துவிடுகிறது.

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவந்தே தீரும்.

அன்னை சாரதாதேவியார்

நான் உனக்கு ஒன்று கூறுவேன். உனக்கு மன அமைதி வேண்டுமானால், பிறரிடத்துக் குற்றம் காணாதே. அதற்குப் பதிலாக உன் குற்றங்களையே எண்ணிப்பார்.

மரணம் எப்போது நம்மை அணுகும் என்பது நிச்சயமில்லை எனவே ஒருவன் வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் நல்ல எண்ணங்களைச் செயலாக்கி விடவேண்டும்.

சுவாமி கெங்காதரானந்தா

மாதா, பிதா, குரு, அரசன் இந் நால்வரும் அறநெறியில் வாழ்பவராகில், கெட்ட பிள்ளையும், கெட்ட சிஷ்யனும், கெட்ட பிரஜையும் இருக்க முடியாது.

ஸ்ரீ சத்தியசாயி பாபா

அன்புடனே ஒவ்வொரு தினத்தையும் தொடக்கி, அன்புடனே கழித்து, அன்பினால் நிரப்பி, அன்புடனே முடியுங்கள். இதுவே தெய்வத்தை அடையும் நேர்ப்பாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நீதி

## காப்பு

உலகநீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறம் சொல்லித் திரியவேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 1

நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 2

மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவு என்று நம்ப வேண்டாம்
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்து இருந்தார் வாசல் வழிச்சேர வேண்டாம்
வனம் தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்
மற்று நிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 4

வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரில் புறம் கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 5

வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்த புகழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே
6

கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கு அழிவை ஒரு நாளும் பேச வேண்டாம்
பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொது நிலத்தில் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
இரு தாரம் ஒரு நாளும் தேட வேண்டாம்
எளியோரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனம் காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேராத இடம் தனிலே சேர வேண்டாம்
செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணை போகித் திரிய வேண்டாம்
வாராரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 8

மண் நின்று மண் ஓரம் செல்ல வேண்டாம்
மனம் சலித்துச் சிலிக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண் அழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையை கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்
புறம் சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
மண் அளந்தான் தங்கை உமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 9

மறம் பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கு அழிவு சொல்ல வேண்டாம்
திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம் பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே 10

அஞ்சு பேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அது ஏது இங்கு என்னில் சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் தன் கூலி
சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சு அறுத்த மருத்துவச்சி கூலி
மகா நோவுதனைத் தீர்த்த மருத்துவன் கூலி
இன் சொல்லுடன் இவர் கூலி கொடாத பேரை
ஏதோது செய்வானோ எமன்றானே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே 12

ஆதரித்துப் பலவகையால் பொருள்கள் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடி வைத்த உலக நீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிக வாழ்ந்து புகழும் தேடிப்
பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே 13



## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம் மானிலத்தில் - வேண்டா
நமக்கிது வழிய நாம் போகுமட்டும்
எமக்கென்னென்றிட்டுண்டிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்

திருக்கோணமலை உப்புவெளியைப்

பிறப்பிடமாகவும், சாம்பல்தீவை வசிப்பிடாகவும்

கொண்ட அமரர். திருமதி. சந்திரலேகா

செல்லத்துரை அவர்களின் மரணச் செய்தியறிந்து,

அவருடைய இறுதி யாத்திரையில் கலந்து

கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள்

அனைவருக்கும், மலர்வளையங்கள் – மலர்

மாலைகள் – பதாகைகள் மூலம் அஞ்சலி

செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எம்

துயரத்தில் பங்கு கொண்டோர்க்கும்

அஸ்திகஞ்சயனம், அந்தியேட்டிக் கிரியைகளில்

கலந்து சிறப்பித்தோர்க்கும் எமது உளமார்ந்த

நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.



இவ்வண்ணம்

**கணவர், மக்கள்**

**மருமக்கள்,**

**பேரக்குழந்தைகள்**

3ம் வட்டாரம்,
மாங்கணாய்,
சாம்பல்தீவு.



உதயன்-திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சா

சின்னத்தம்பி + தெய்வானைப்பிள்ளை

- ஆழ்வாப்பிள்ளை
- செல்லையா
- செல்லம்மா
- செல்லத்துரை
- நாகராசா
- கண்மணி

செல்லத்துரை

- சத்தியசீலன் + பிரியதக்ஷனி
  - லீனுஷா
  - தனுஷிகா
- உதயசீலன் + சுமதி
  - கிரிஷோத்மன்
  - தனுஷிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவளி

சந்திரசேகரம்பிள்ளை + பகவதிப்பிள்ளை

**சந்திரலேகா**

இராதாமனோகரன்

இராதாசங்கர்

ரி

இராதாகிருஷ்ணன்

சசிலேகா

ஜெயசீலன்
+
மதிவதனி

சிவசாஹினி

தர்சினி
+
இராசலிங்கம்

மிதுசனா
ததுசன்
பதுமிதா
சுலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org